International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 2 April - June 2026

Published on 14, April - June 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# கிளைமொழிகளும் - வட்டார வழக்குச் சொற்களும்

**முனைவர் பா. மேகலா**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை
ஸ்ரீ மூகாம்பிகை கலை மற்றும் அறிவியல்(மகளிர்)
மல்லுப்பட்டி, பாலக்கோடு வட்டம்
தருமபுரி மாவட்டம் – 636805

## அறிமுகம்

பூமிப்பந்தில் மனிதன் தோன்றிய வரலாற்றை ஆராயும் ஆய்வாளர்கள் அவரவருக்குக் கிடைத்த ஆதாரங்களைக் கொண்டு இங்கிருந்துதான் மனிதன் தோன்றியிருக்க முடியும் என்று நிறுவ முயற்சிக்கிறார்கள். மனிதன் மனிதனாவதற்கு மொழி இன்றியமையாத கருவியாகும். மனித வாழ்வியலில் மகத்தான கண்டுபிடிப்பாக மொழியை வரையறை செய்யலாம். அது பரிணாம வளர்ச்சியின் குறியீடாகவும், மனித உழைப்பின் பயனாகவும் கிடைத்தது என்பதை யாராலும் மறுக்க முடியாது.

வாழ்வின் தேவையும், அவசியமும் மொழி உருவாவதற்கு காரணமாகின்றன. அவை தொடக்கக் காலத்தில் உடல்மொழியாகவும், சைகை மொழியாகவும் பரிணமித்தன. பின்பு அவை தட்பவெப்பம், வாழ்விடங்கள் போன்ற பல்வேறு காரணங்களால் குழு மொழிகளாக வளர்ந்து, கிளைமொழிகளாக வளர்ச்சியடைந்தன. இக்கிளை மொழிகளை தற்பொழுது வட்டார வழக்கு என்று அடையாளப்படுத்துகிறோம். இவ்வட்டார வழக்கு மொழி இவ்வாய்வின் மையமாக அமைகின்றது.

## நோக்கம்

செவ்வியல் மொழி என்று தகுதி படைத்திருக்கின்ற தமிழ் அடிப்படையில் திசைச்சொற்களாகவும், வழக்குச் சொற்களாகவும் இருந்தவையே. இச்சொற்கள் அந்தந்தப் பகுதில் வாழும் மக்களின் வாழ்நிலைக்கேற்ப தனித்துவம் வாய்ந்தவை என்பதை எடுத்துக்காட்டுவதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகிறது.

## கருதுகோள்

ஒருங்கிணைந்த தருமபுரி கிருஷ்ணகிரி மாவட்ட மக்களால் பேசப்படும் வட்டார வழக்குச் சொற்கள் தமிழ் மொழியின் தனித்த அடையாளமாக இருக்கிறது என்பதையும் தகடூர் வட்டாரம் என்பது தனி கிளைமொழி என்பதையும் கருதுகோளாகக் கொண்டு இவ்வாய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.

## ஆய்வுக் கட்டுரையின் மூலம்

தருமபுரி அரசு கலைக்கல்லூரித் தமிழ்த்துறையில் உதவிப் பேராசிரியராகப் பணியாற்றிவரும் பேராசிரியர் கு.சிவப்பிரகாசம் அவர்கள் தொகுத்த **“தகடூர் வட்டார வழக்குச்சொல் அகராதி”**

என்னும் நூலில் உள்ள வழக்குச் சொற்கள் இக்கட்டுரைக்கு மூலமாக அமைந்துள்ளது.

**பண்டையக் காலத்தில் வட்டார வழக்குச் சொற்கள்**

சொற்களை அடைப்படையாக பெயர்ச்சொல்-வினைச்சொல் என இரண்டாகப் பிரித்து அதனோடு தொடர்புடைய இடைச்சொல்லை யும் - உரிச்சொல்லையும் தொல்காப்பியம் வகுத்துள்ளது. இதனோடு தொடர்புடையதாக வடசொல்லையும் - திசைச் சொல்லையும் வரையறை செய்தனர். இங்கு திசைச்சொல் என்று அறியப்படுகின்ற சொற்களை பன்னிரு நாடுகளில் பேசப்பட்டதாக அடையாளப் படுத்துகிறனர்.

**செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்**

**தம் குறிப்பினவே திசைச்சொல் கிளவி.**

(தொல் – சொல்லதிகாரம்)

அவை

தென்பாண்டி நாடு - திருநெல்வேலிப் பகுதி – சொன்றி – சோறு

குட்ட நாடு - கேரளத்திலுள்ள கோட்டயம், கொல்லம் மாவட்டங்கள் – தள்ளை - தாய்

குடநாடு - வடமலபார் – அச்சன் - தந்தை

கற்காநாடு - கோயம்புத்தூர் சார்ந்த மலைப் பகுதிகள் – கையர் - வஞ்சர்

வேணாடு - திருவாங்கூரின் தென்பகுதி (கன்னியாகுமரி மாவட்டம்) – கிழார் - தோட்டம்

பூழிநாடு - கோழிக்கோடு – ஞமலி - நாய்

பன்றிநாடு – பழநிமலை சூழ்ந்த பகுதி – செய் - வயல்

அருவாநாடு - வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கல்பட்டு – கேணி - சிறுகுளம்

அருவா வடதலை நாடு - சித்தூர், நெல்லூர் – எகின் - புளி

சீதநாடு - நீலகிரி – எலுவன் - தோழன்

மலையமான் நாடு - திருக்கோவலூர் சூழ்ந்த பகுதி – இகுளை - தோழி

புனல்நாடு - சோழ நாடு – ஆய் - தாய்

என்று வரையறை செய்துள்ளனர்.

**தருமபுரி மக்களின் வாழ்வியல் முறை**

தமிழ்நாட்டின் மிகப்பெரிய காட்டுவளத்தை முதன்மையாகக் கொண்டுள்ள தருமபுரி மாவட்டம் தொழில், விவசாய வளர்ச்சியில் பின்தங்கியும், கல்வி வளர்ச்சியில் மிகவும் வேகமாக வளர்ந்துவரும் மாவட்டமாகும். நான்கு திசைகளிலும் மலைகளால் சூழப்பட்ட இம்மாவட்ட மக்கள் பேசும் தமிழ்மொழி தனித்த அடையாளத்துடனும், தனித்துவமாக வும் இருக்கின்றது. மானாவாரி நிலங்களை யும், மேய்ச்சல் தொழிலையும் முதன்மை யாகக் கொண்டுள்ள இம்மக்கள் பேசும் மொழியின் தனித்துவத்திற்குக் கடந்த காலங் களில் சேர, சோழ, பாண்டிய மன்னர்களும் தொடர்ந்து கொய்சாளர், நூளம்பர், கிருஷ்ணதேவராயர், போன்ற வேற்றுமொழி பேசும் மன்னர்களின் ஆட்சியின்கீழ் இருந்த மையால் பல்வேறு புதுப்புது வழக்குச் சொற்கள் உருவாகி நிலைபெற்றதோடு தமிழுக்கென்ற தனித்த அடையாளத்தோடு ஏராளமான வார்த்தைகள் இருப்பதைப் பேராசிரியர் சிவப்பிரகாசம் தொகுத்துள்ளார்.

**தற்காலத்தில் வட்டார வழக்குச் சொற்கள்**

உலகச் செவ்வியல் மொழி என்னும் தகுதியைத் தமிழ் பெற்றபோதிலும் உலகம் முழுமைக்கும் பேசும் தமிழர்களிடையேயும், இந்தியத் தமிழர்களிடையேயும், தமிழ்நாட்டில் வாழும் தமிழர்களிடையேயும் தனித்த அடையாளங்களோடு சிறந்தச் சொற்கள் காணப்படுகின்றன. குறிப்பாக மலேசியா-சிங்கப்பூர், இலங்கை-கனடா என இந்தியாவிற்கு வெளியில் வாழும் மக்களின் தமிழ் தனி அடையாளத்துடனும், இந்தியாவைப் பொறுத்த அளவில் கேரளா, தமிழ்நாடு அல்லாத மாநிலங்கள் பேசும் தமிழ் வெவ்வேறு ஒலிப்பு முறைகளில் உள்ளன. தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, கோவை, தஞ்சை, நெல்லை, நாகர்கோவில் போன்ற வட்டார வழக்கு வரிசையில் தகடூர் என்று வழங்கிய தருமபுரியிலும் தனித்த வட்டார வழக்குச் சொற்களைப் பயன்படுத்துகின்றனர்.

**தகடூர் வட்டார வழக்குச் சொற்கள்**

**கீது** (இருக்கிறது) – வூட்டுல சோறு **கீது**

**அந்தராசியா** (தன்னந்தனியாக) – **அந்தராசியா** விட்டிட்டு போயிட்டானே

**கிசுக்கான்** (மாற்று நபர்) – விளையாட்டுக்கு

**கிசுக்கான்** வேணும்

**நவிசிக்கெட்டு** (சொரணை இல்லாமல்) - **நவிசிக்கெட்டு** மறுபடியும் வந்துட்டான்

**முருத்துனு** (பேசுவதில் விருப்பமில்லாமல் – அவன் **முருத்துனு** கீரான்

**அவதிகொவசரம்** (அவசரமாக) – **அவதிகொவசரமா** போகாத

**அங்கலாப்பு** (ஆற்றாமை) – ஒரே **அங்கலாப்பா** கீதுப்பா

**மொரப்பாடு** (உறவை துண்டித்தல்) – அவமேள **மொரப்பாடு** போட்டுட்டா

**சிலாக்கிப்படாது** (சரிவராது) – அவன் பேசறது **சிலாக்கிப்படாது**

**சில்லாதாரி** (சிறு வயதுக் குழந்தைகள்) – **சில்லாதாரி** போறான் பாரு

**கம்மோடியா** (விவரமில்லாமல்) – அது **கம்மோடியான** காலம்

**பிருமித்தியா** (பிடிவாதமாக) – சாப்பாடு இல்லாம **பிருமித்தியா** இருக்கிறான்

**சிக்காடு** (கொசு வகை) – **சிக்காடு** ரொம்பக் கடிக்குது

**சவடாளு** (வீராப்பு) – செரியான **சவடாளு** புடிச்சவன்

**அபாலத்திக்கும்** (அதன்பிறகு) – **அபாலத்திக்கும்** என்ன ஆச்சு

**வசனாவி** (மிகை உவர்ப்பு) – உப்பு கரிச்சி **வசனாவியா** இருக்கு

**வினாயம்** (மறைபொருள்) – உனக்கு ஒரு **வினாயம்** வச்சிருக்கேன்

**நெமநெமயா** (ஆர்வமாக) – விளையாடறதுக்கு **நெமநெமயா நிக்கிறான்**

**நோங்கி** (சத்தமாக) – அவன **நோங்கி** கூப்புடுங்கோ

இப்படி ஆயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்ட சொற்களால் தொகுக்கப்பட்ட தகடூர் வட்டார வழக்குச் சொல் அகராதி தருமபுரி மண்ணின் மணம்வீசும் வேராக இருந்து வருகிறது.

**முடிவுரை**

வட்டார வழக்குச் சொற்கள் தமிழ் மொழியின் அடிப்படைச் சொற்களாகும். ஏட்டிலக்கியங்களில் இருப்பதற்கு முற்றிலும் மாறாக மக்களால் கையாளப்படும் வழக்குச் சொற்கள் கிளைமொழியின் குழந்தையாகும். தருமபுரி மக்களால் இன்றளவும் பேசப்படும் மேற்கண்ட வழக்குச் சொற்கள் தருமபுரியின் தனித்த அடையாளமாக இருக்கிறது. தருமபுரி மாநிலத்தின் எல்லையாக இருக்கும் பகுதி என்பதாலும், தெலுங்கு, கன்னடம், உருது பேசும் மக்களோடு நெருங்கிய தொடர்பு இருப்பதாலும், தெலுங்கு, கன்னடம், நாட்டைச் சார்ந்த மன்னர்கள் தருமபுரியை ஆட்சி செய்தமையாளும் இதுபோன்ற ஏராளமான வழக்குச் சொற்கள் இங்கு புழங்குகின்றன என்பதை இவ்வாய்வுக் கட்டுரையின் வழியாக உறுதிபடுத்த முடிகிறது.

**துணைநூல்கள்**

1. டாக்டர் சு. சக்திவேல் – தமிழ்மொழி வரலாறு, மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை – 600108
2. முனைவர் கு. சிவப்பிரகாசம் – தகடூர் வட்டார வழக்குச் சொல் அகராதி, 5/211, வாதாப்பட்டி, கொங்கவேம்பு அஞ்சல், அரூர் வட்டம் தருமபுரி மாவட்டம் – 636902